## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 2-4 - அன்றாயர்
## (திருநீர்மலை)

1078 * அன்றாயர் குலக் கொடியோடு * அணிமாமலர் மங்கையொடு - அன்பளவி * அவுணர்க்கு
என்தானும் இரக்கம் இலாதவனுக்கு * உறையும் இடமாவது ** - இரும்பொழில் சூழ்
நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை * தடம் திகழ் கோவல் நகர் *
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு இடம் * மாமலையாவது - நீர்மலையே 1

1079 காண்டா வனம் என்பதோர் காடு * அமரர்க்கரை அன்னது கண்டவன் - நிற்க * முனே
மூண்டார் அழல் உண்ண முனிந்ததுவும் * அதுவன்றியும் முன்னுலகம் – பொறை தீர்த்து
ஆண்டான் ** அவுணன் அவன் மார்பகலம் * உகிரால் வகிராக - முனிந்து * அரியாய்
நீண்டான் குறளாகி நிமிர்ந்தவனுக்கு இடம் * மாமலையாவது - நீர்மலையே 2

1080 அலமன்னுமடல் சுரிசங்கம் எடுத்து[1] * அடல் ஆழியினால் அணியார் - உருவின் *
புலமன்னு வடம் புனை கொங்கையினாள் * பொறை தீர முனாள் – அடுவாளமரில் **
பல மன்னர் படச் சுடர் ஆழியினைப் * பகலோன் மறையப் பணி - கொண்டு அணிசேர் *
நில மன்னனுமாய் உலகாண்டவனுக்கு இடம் * மாமலையாவது - நீர்மலையே 3

1081 தாங்காததொர் ஆளரியாய் * அவுணன் தனை வீட முனிந்து அவனாலமரும் *
பூங்கோதையர் பொங்கெரி மூழ்க விளைத்து அதுவன்றியும் * வென்றி- கொள் வாளமரில் **
பாங்காக முன் ஐவரொடு அன்பளவிப் * பதிற்றைந்திரட்டிப் படை வேந்தர் - பட *
நீங்காச் செருவில் நிறை காத்தவனுக்கு இடம் * மாமலையாவது - நீர்மலையே 4

1082 மாலும் கடலார மலைக்குவடிட்டு அணை கட்டி * வரம்புருவ மதி சேர் *
கோல மதிளாய இலங்கை கெடப் * படை தொட்டு ஒருகால் அமரில் – அதிர **

[1] மடுத்து

காலம் இதுவென்று அயன் வாளியினால் * கதிர் நீள்முடி பத்தும் அறுத்து –
அமரும் *
நீலமுகில் வண்ணர்[2] எமக்கு இறைவற்கு இடம் * மாமலையாவது -
நீர்மலையே 5

1083 பாரார் உலகும் பனிமால் வரையும் * கடலும் சுடரும் இவை உண்டும் * -
எனக்கு
ஆராதென நின்றவன் எம்பெருமான் * அலை நீர் உலகுக்கு அரசாகிய ** -
அப்
பேரானை முனிந்த முனிக்கரையன் * பிறரில்லை நுனக்கெனும் –
எல்லையினான் *
நீரார் பேரான் நெடுமால் அவனுக்கு இடம் * மாமலையாவது -
நீர்மலையே 6

1084 புகரார் உருவாகி முனிந்தவனைப் * புகழ் வீட முனிந்து உயிர் உண்டு * -
அசுரன்
நகராயின பாழ் பட நாமம் எறிந்து அதுவன்றியும் * வென்றிகொள் வாள் –
அவுணன் **
பகராதவன் ஆயிர நாமம் * அடிப் பணியாதவனைப் பணியால் அமரில் *
நிகராயவன் நெஞ்சிடந்தான் அவனுக்கு இடம் * மாமலையாவது -
நீர்மலையே 7

1085 பிச்சச் சிறு பீலி பிடித்து உலகில் * பிணந்தின் மடவார் அவர் போல் * -
அங்ஙனே
அச்சமிலர் நாணிலரா தன்மையால் * அவர் செய்கை வெறுத்து அணிமாமலர் -
தூய் **
நச்சி நமனார் அடையாமை * நமக்கு அருள் செய் என உள் குழைந்து –
ஆர்வமொடு *
நிச்சம் நினைவார்க்கு அருள் செய்யும் அவற்கு இடம் * மாமலையாவது -
நீர்மலையே 8

1086 பேசும் அளவன்று இது வம்மின் நமர்! * பிறர் கேட்பதன் முன் பணிவார் -
வினைகள் *
நாசமது செய்திடுமா தன்மையால் * அதுவே நமது உய்விடம் நாள்மலர் -
மேல் **
வாசமணி வண்டறை பைம்புறவில் * மனமைந்தொடு நைந்துழல்வார் * மதியில்
நீசரவர் சென்று அடையாதவனுக்கு இடம் * மாமலையாவது -
நீர்மலையே 9

1087 * நெடுமால் அவன் மேவிய நீர்மலை மேல் * நிலவும் புகழ் மங்கையர் -
கோன் * அமரில்

[2] வண்ணன்

கடமா களியானை வல்லான் * கலியன் ஒலி செய் தமிழ் மாலை –
வல்லார்க்கு ** உடனே
விடுமால் வினை * வேண்டிடில் மேலுலகும் எளிதாயிடும் அன்றி -
இலங்கொலி சேர் *
கொடுமா கடல் வையகம் ஆண்டு * மதிக்குடை மன்னவராய் அடி -
கூடுவரே 10

**அடிவரவு:** அன்றாயர் காண்டா அலம் தாங்காது மாலும் பார் புகர் பிச்சம் பேசும் நெடுமால் பாராயது